நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 19 [01-04-1993] வியாழக்கிழமை ஓசை 42

# தனிச் சிங்களத்திலுள்ள தேர்தல் இடாப்பு

தமிழுக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட போதும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலைமுன்னிட்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்பு முழுச் சிங்களத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் தபால் மூலம் வாக்களிப்பதற்குரிய விண்ணப்பப்பத்திரங்கள்கூட தனிச் சிங்களத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சுதந்திரமான ஒரு தேர்தல் திணைக்களம் அரச கரும மொழியாகத் தமிழ் பிரகடனப்படுத்தப் (04 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி பாதை விவகாரம்

# ஐ. நா. அதிகாரிகள் வருவர்

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு

[யாழ்ப்பாணம்]

பூநகரி பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் அடுத்த கட்டப் பேச்சு ...த்தை நடத்துவதற்கென விரைவில் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய பிரதி...ள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இவர்கள் வருமபோது பூநகரிப்பாதை திறப்பது தொடர் ... 'பூர்வாங்க ஏற்பாட்டுத் திட்டம்' ஒன்றையும் உடன் கொண்டு வருவர் எனவும் நம்பகர ...வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

...ல் யாழ். வரவுள்ள ...களுக்கான ஐ. நா. ...தானிகராலயக்குழுவில் ...ன் கொழும்பு வதிவிடப் ...திநிதி டாக்டர் நிக்கிலசும், ...மலும் இரு அதிகாரிகளும் ...வருவார்கள் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை இக் குழுவினர் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர், பூநகரி பாதை திறப்பது தொடர்பாக பூர்வாங்க ஏற்பாட்டுத் திட்டம் ஒன்றை வரைவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இப் பூர்வாங்க ஏற்பாட்டுத் திட்டம் முடிவடைந்ததும் யாழ். வரும் இப் பிரதிநிதிகள் இது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

இதன் பின்னர் இக் குழுவினர் கொழும்பு திரும்புவர் எனவும் தெரியவருகின்றது.

இதனை அடுத்து பூநகரி பாதை தொடர்பாக புலிகளுடன் நடைபெறவுள்ள இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையில் ஜெனீவாவிலுள்ள அ. ஐ. நா உபர்ஸ்தானிகராலய தலைமைப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர் எனவும் தெரியவருகின்றது.





கிளாலியில் கடற்படையின் 'பீரங்கி தாக்குதலால் மருத்துவபீட' மாணவன் ஒருவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியை படத்தில் காணலாம்.

# பல்கலை. மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி


(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கட...

கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை யாழ். பல்...

மாணவர் ஒன்றியத்தினர் வேண்டிக்கொண்டனர்.



பருத்தித்துறைத் துறைமுகத்தில்வைத்து யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன்பன் (ஜவான்), மூன்று முஸ்லிம் மீனவர்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைப்பதை படத்தில் காணலாம்.

# ...ன்று முஸ்லிம் மீனவர்கள் புலிகளால் விடுவிப்பு

(...ருத்தித்துறை)

...ரில் விடுதலைப் புலி... கைது செய்யப்பட்டு ...சில மாதங்களாக ... வைக்கப்பட்டிருந்த 3 ...ம் மீனவர்கள் நேற்று மாலை சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதியிடம் ...படைக்கப்பட்டனர். மனிதாபிமான அடிப்படையில் இந்த மூன்று மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4 மணிக்கு பருத்தித்துறையில் சர்வதேச செஞ்சிலுவை பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டனர். பருத்தித்துறை துறைமுகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் புலிகளின் தரப்பில் யாழ். மாவட்ட துணை அரசியல் துறை பொறுப்பாளர் தமிழன்பன் (ஜவான்), யாழ். மாவட்ட தளபதி அன்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைமன்னாரைச் சேர்ந்தவர்களான முகமட் றூமி (17] முகமட் ஜாசீர் (17) விடத்தல் தீவைச்சேர்ந்த உதுமான் முகமது லெப்பை தைமுஸ்கான் (26) ஆகிய மூன்று மீனவர்களே மனிதாபிமான அடிப்படையில் புலிகளினால் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

## உணவுப் பொருள்களுக்கு புதிய விலை நிர்ணயம்

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களினூடாக ...ற்பனை செய்யப்படும சில ...த்தியாவசியப் பொருள்க...க்கு புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதன்படி அரிசி 17ரூபா 30 சதமாகவும், மா 13 00 ரூபாவாகவும், சீனி 27 ரூபா 75 சத...கவும் விற்பனை செய்யப்...வுள்ளன, மேற்படி விலை ...ணயப்படி உடனடியாக ...ற்பனை மேற்கொள்ளப்பட...ள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவு ...வி ஆணையாளர் தலைமையில் திரு. கனகலிங்கம், திரு. செந்தில்நாதன், திரு சூ. சிறில் ஆகியோரைக் கொண்ட அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதனைச் சந்தித்து கூட்டுறவுச்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். இக் கலந்துரையாடலின் போதே மேற்படி விலை நிர்ணயம் செய்யப்படடது.

''வாதுவ'' என்ற கப்பலில் எடுத்து வரப்படும் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கு கப்பல் கூலி அறவிடப்படமாட்டாது என்றும் தெரியவருகிறது. (க)

## வடக்கே வருவோர் அதிகரிப்பு

(வவுனியா)

கடந்த 28 ஆம் திகதி பல்லாயிரக்கணக்கான மக்கள் வவுனியா ஊடாக வடபகுதி நோக்கி வந்தனர்.

இவ்வாறு வந்தவர்களில் யாழ். குடாநாட்டு மக்களே அதிகம் கொழும்பிலும் வவுனியாநகரிலும்தமிழ் இளைஞர்களின் கைது நிகழ்வை அடுத்து அதிகமான இளைஞர்களும் வடபகுதி நோக்கி வந்தனர்.

## ரெலோவினால் கைது

(மூதூர்)

கல்வெட்டுவானில் வைத்து கடந்த 23 ஆம் திகதி ரெலோ கும்பலினால் தமிழ் மகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் இரவு 11-20 மணியளவில் மேற்படி கும்பலினால் கைது செய்யப்பட்டவர் மூதூர் பூநகரைச் சேர்ந்த வைரமுத்து வேலாயுதம் (வயது 50) எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 9 மாவட்டங்களில் இணைந்து போட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஒன்பது மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலை இ. தொ. கா. பூர்த்தி செய்து உள்ளது. தென்மாகாணத்தில் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இ. தொ. கா போட்டியிடுவதற்கான பேச்சுக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக இ. தொ. கா. வட்டாரங்கள் கூறியுள்ளன.

## தெற்கில் ஊர்வலங்களுக்கு தடை

எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்றுமுதல் ஒருவாரகாலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதன் பொருட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத்தின் பீரங்கித்தாக்குதலுக்கு பலியான யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாம் வருட மாணவன் நிக்கலசின் மரணத்தை சர்வதேச அரங்கிற்கு தெரிவிக்கும் வகையில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தியது. இதில் யாழ். பல்கலைகழக சகலபீட மாணவர்களும், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களும், கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர்களும் ... கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளவில் ஆரம்பித்த ஆர்ப்பாட்ட பேரணி பல சுலோக அட்டைகளை தாங்கியவாறும் கண்டனக் கோசங்களை எழுப்பியவாறும் கோவில் வீதி வழியாக அகதிகளுக்கானஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயத்துக்கு சென்று அங்குள்ள வதிவிடப் பிரதிநிதி திரு அசோக்குமாரிடம் மகஜரொன்றை கையளித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்குஅனுப்பிவைக்குமாறு

அதனைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அடைந்த பேரணி செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதியிடம் மகஜரொன்றை கையளித்து ஜெனீவாவிற்கு அனுப்பிவைக்குமாறு கோரினர்.

பின்னர் யாழ். செயலகத்திற்கு சென்று தரையில் அமர்ந்த நிலையில் இருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு அனுப்பி வைக்குமாறு கோரி மகஜரொன்றை மேலதிக அரச அதிபரிடம்கையளித்தனர். (சி)

# வடமராட்சி பகுதி மீது முப்படைத் தாக்குதல்

## ஒருவர் காயம்; வீடுகள் சேதம்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி பகுதியை நோக்கி நேற்று சிறிலங்கா படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். சில வீடுகள் சேதமடைந்தன.

காலை 10.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறி எறிகணைகள் ஏவப்பட்டன. இவ் எறிகணைகளில் ஆறு உடுப்பிட்டி இலக்கனாவத்தையிலும், இரண்டு வல்வெட்டித்துறையிலும், இரண்டு தொண்டமனாறிலும் வீழ்ந்து வெடித்தன. உடுப்பிட்டி பகுதியில் விழுந்த எறிகணை ஒன்றிற்கு உடுப்பிட்டி சமரபாகுவைச்சேர்ந்த இ. செல்வராசா [வயது 46] என்பவர் படுகாயமடைந்தார். மேலும் சிலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.

இதே வேளை இவ் எறிகணைத் தாக்குதல் நடத்து கொண்டிருந்தபோது சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று உடுப்பிட்டி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை மாண்டான் பகுதிகளைச்சுற்றி வட்டமிட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகத்தையும் கிறைனைற் தாக்குதலையும் மாறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி பரீட்சை முடிவு உதவி கல்வி பணிப்பாளரிடம்

(கொழும்பு)

வடபகுதி மாணவர்களுக்கான க. பொ. த. (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்பில் யாழ். மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், அவர் இன்னும் இரண்டொரு தினங்களில் கப்பலில் செல்லும் போது எடுத்துச் செல்வார் என்றும் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல கூறியுள்ளார்.

## க.பொ.த. பரீட்சைபெறுபேறு யாழ். இந்து முன்னணியில்

(கொழும்பு)

க. பொ. த சாதாரணதரப் பரீட்சையில் வடபகுதியில் யாழ். இந்துக்கல்லூரி முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் வெளியாகியது தெரிந்ததே. இப்பரீட்சையில் வடபகுதியில் பதினைந்து மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் திறமைச் சித்திபெற்றுள்ளனர்.

இதில் யாழ். இந்துக்கல்லூரியில் ஏழு பேரும் சென் ஜோன்ஸ். சென் பற்றிக்ஸ்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்த இராணுவம் பொதுமக்கள் மீது தாக்குதல்

### ஒருவர் பலி; ஒருவர் காயம்

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை காலை 8.10 மணியளவில் திருமலையில் உள்ள கூனித்தீவு எனும் இடத்தில் பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலே மூதூர் மேன்காமம் கிளிவெட்டியைச் சேர்ந்த விவசாயியான பொன்னுத்தம்பி சுந்தரலிங்கம் (வயது 24) என்பவரே பலியானவர் ஆவார். இதன்போது காயமடைந்த நபர்பற்றிய விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

## காங்கேசன்பாதைவிவகாரம் பலாலியில் இன்று சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை வாகன அணிமூலம் குடாநாட்டிற்குள் எடுத்து வருவது சம்பந்தமான சில முக்கிய முடிவுகள் குறித்து பலாலி இராணுவ முகாமில் இன்று முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெறுகின்றது.

மேற்படி உத்தியோக பூர்வ சந்திப்பில் கலந்து கொள்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்.வதிவிடப் பிரதிநிதி நேற்று மாலை இங்கிருந்து பலாலி இராணுவ முகாமிற்கு விரைந்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### பலிக்களம் மேடையேறுகிறது

யாழ் திருமறைக் கலாமன்றம் பிரமாண்டமான முறையில் தயாரித்துள்ள யேசுவின் திருப்பாடுகளை சித்திரிக்கும் 'பலிக்களம்' எனும் நாடகம் 100 அடி நீளமான மேடையில் காட்டப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 1 ஆம், 2 ஆம் 3ஆம், 4-ஆம் திகதிகளில் தினமும் மாலை 6-45 மணிக்கு ஒவ்வொரு காட்சிகள் இடம் பெறும். மேற்படி நாடகத்தில் கலாமன்றத்தின் பழைய, இளைய தலைமுறைக் கலைஞர்கள் 50 பேர்களுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர். (21)

### விடத்தல் பளைக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 19 ஆசிரியர்கள் 1-5-1993 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் படியாக விடத்தல்பளையில் இயங்க உள்ள புங்குடுதீவு சிறி கணேசானந்தா வித்தியாலயத்திற்கு யாழ். கல்விப் பணிப்பாளரினால் மாற்றப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கடமையேற்று ஒரு வருடத்தின் பின் தமது சொந்த இடங்களுக்கு மாற்றம் கோரத் தகுதியுடையவர்கள் என்று மாற்றக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Postgraduate Diploma in Public Administration**

As notified earlier in local newspapers, the applicants for the above menti-

## 45 தமிழ் இளைஞரை விடுவிக்க ஜயலத் கமிஷன் சிபார்சு

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலரையும் விடுதலை செய்வதற்கு சிபார்சு செய்யும்படி ஜயலத் கமிஷனுக்கு உயர்நீதிமன்றம் பணிந்துள்ளது.

பல்வேறு மனித உரிமை இயக்கங்களும் அரசாங்கத்திற்கு கொடுத்துள்ள அழுத்தத்தின் காரணமாகவே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

இதே வேளை ஜயலத் கமிஷன் முதன்முறையாக 45 தமிழ் இளைஞர்களின் விடுதலைக்கும் சிபார்சு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விசாரணை செய்வதற்கு தமிழ் தெரிந்த அதிகாரிகளின் பற்றாக் குறையும், ஏனைய வசதிக் குறைவுகளும் தடையாக இருப்பதாக புனர்வாழ்வுப் பகுதிப் பொறுப்பதிகாரி ஆனந்த விஜியசேகரா குறிப்பிட்டிருக்கின்றார்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் (ஒப்பந்த அடிப்படையிலான) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993-04-16 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:- ரூபா 3295/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள்:-

சுகாதாரத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்ப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தகைமைபெற்றதிலிருந்து குறைந்த பட்சம் மூன்றாண்டு அநுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுக்கப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x20 ச. மீ. அளவுடைய கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்

### விபரம் சேகரிப்பு

விதவைகள், கணவனை விட்டுப் பிரிந்தவர்கள், கணவன் காணாமற் போனவர்கள் ஊனமுற்றோர்களின் விபரங்கள் சனசமூக நிலையங்கள் மூலம் திரட்டப்படுகின்றன. அவ்வப்பகுதிச் சனசமூக நிலையங்களில் சம்பந்தப்பட்டவர்கள் தமது விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (24)

### அறிவியல்கருத்தரங்கு நடத்தவும்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களும் கிராமிய ரீதியில் அறிவியல் கருத்தரங்குகளை நடாத்த வேண்டுமென்று யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும்பௌர்ணமி தினத்தன்று இவ் அறிவியல் கருத்தரங்குகளை நடாத்தி வருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (24)

### வான் கடிதத்திற்கு 12 ரூபா

வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்ற சகல வான் கடிதங்களுக்கும், ஏரோக்கிராம்மொத்தம் 12 ரூபா பெறுமதியான முத்திரையுடன் அனுப்பிவைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வான் கடிதத்தின் பெறுமதி 8 ரூபா எனவும் அத்துடன் மேலதிகமாக நான்கு ரூபாய் முத்திரை ஒட்டி அனுப்புமாறு யாழ். பிரதான தபாலகபகுதியினர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளனர். (24)

### குருபூசை

[யாழ்ப்பாணம்]


ஸ்ரீமத் யோகர் சுவாமிகள் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை கே. கே எஸ் வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும்.

## செட்டிகுளம் காடுகளில் தேடுதல் தொடர்கிறதாம்

செட்டிகுளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள காடுகளில் தேடும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டதாக இராணுவ அறிவிப்பாளர் தெரிவிக்கின்றார்.

இதே வேளை இப்பகுதியில் ஊரடங்கும் அமுலில் இருப்பதாக ஏ. எவ். பி. நிறுவனம் செய்தி வெளியிட்டது.

### 6-ம் மாத நினைவலைகள்



மலர்வு 24-06-1954

உதிர்வு 6-10-1992

**காசிப்பிள்ளை சண்முகநாதன்**

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அப்பாவே
உங்கள் முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்த
கலகலப்பு வாழ்க்கை எல்லாம்
கனவாய் மறைந்தது அப்பா
துன்ப சோகத்தில் முகம் கூம்பி
விழி எல்லாம் நீர் தேங்கி
விம்மலும் விக்கலும் விடையாகிவிட்டதே அப்பா
சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, மனைவி, பிள்ளைகள்
சகோதரர்கள், மைத்துனர்கள்

38, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய், (4603)

### 31-ம் நாள் நினைவலைகள்...



மலர்வு: 09 — 08 — 1972

உதிர்வு 02 — 03 — 1993

**செல்வி பாலசுந்தரம் வானதி**

இனியவளே! உன் நினைவெம்மை வாட்டுகும்மா!

## 15 ஆயிரம் விதை தேங்காய் குமாரியில் வந்தன

யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்திற்கு 15ஆயிரம் விதை தேங்காய்கள் 'குமாரி' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதில் 10 ஆயிரம் உயர்ரக தேங்காயும் சாதாரண ரக தேங்காய் 5 ஆயிரமும் வந்துள்ளன. எடுத்துவரப்பட்ட விதை தேங்காய்கள் நாற்று மேடையில் வைக்கப்பட்டு பின்னர் விற்பனை செய்யப்படும்.

வந்துள்ள உயர்ரக விதை தேங்காயில் 5ஆயிரம் விதை தேங்காய்கள் அம்பன் கமநல சேவை நிலையத்தில் நாற்று மேடையில் வைக்கப்படவுள்ளதாக யாழ். கமநலசேவை சிரேஷ்ட உதவிஆணையாளர் திரு. சிவசாமி தெரிவித்தார்.

### 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 03-07-1962

தமிழ்த்தாய்மடியில் 01-04-1987

**லெப்டினன்ட் மயூரன் [பபி]**

[இராசரத்தினம் செல்வக்குமார்]

களங்கள் பலகண்டு தமிழின் நிலைமேவ
காதல் கொண்டாயெடா!
கணைகள் பலதேடி எதிரி சிரம் வீழ்த்தும்
கலையில் உயர்ந்தாயெடா!
உளங்கொள் தமிழீழ உணர்வில் நிதமூறி
உயர்வு படைத்தாயெடா!
உவகை மிகுபொங்கும் சினைப்பர் தனையேந்தி
உணர்வில் கலந்தாயெடா!
வளங்கொள் தமிழன்னை வாழ்வுபெறும் வண்ணம்
வளர்ந்தாய் செல்வக்குமரா - இன்று
வணங்கும் பொருளாகி இலங்கும் மாவீரர்
இனத்தில் கலந்தாயடா!
களத்தில் நீநின்ற காட்சி தானோடி
வருடம் ஆறானதே
கண்டும் உனைநாடும் சிந்தை அதுவாகி
கரங்கள் குவித்தோமெடா! மயூரா
உனையும் நினைத்தோமடா! நாங்கள்
கண்ணீர் சொரிந்தோமடா!

என்றும் உமது பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
தங்கைமார், மைத்துனர்மார்,
பெறாமக்கள், மருமக்கள்,
நண்பர்கள்.

[சி-6311]

### நினைவு கூருகின்றோம்...

**1993-04-01**

பட்டுள்ளார்கள்.

இவர்கள் கடமையேற்று ஒரு வருடத்தின் பின் தமது சொந்த இடங்களுக்கு மாற்றம் கோரத் தகுதியுடையவர்கள் என்று மாற்றக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**Postgraduate Diploma in Public Administration**

As notified earlier in local newspapers, the applicants for the above mentioned course, should sit a selection / aptitude test on 1993 - 04 -03, Saturday at 9.00 a. m. They should collect the admission cards from the Assistant Registrar, Examinations Branch, University of Jaffna, during working hours The list of selected candidates is displayed in the University Notice Board.

REGISTRAR,

University of Jaffna.
Thirunelvely.
1993-3-30

(சி-6302)

---

சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுக்கப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x20 ச. மீ. அளவுடைய கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

விண்ணப்பமுடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவற்ற முறையில் விவரங்கள் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-3-29

(சி/6307)

---

12 ரூபா

வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்ற சகல வான் கடிதங்களுக்கும், ஏரோக்கிராம்மொத்தம் 12 ரூபா பெறுமதியான முத்திரையுடன் அனுப்பிவைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வான் கடிதத்தின் பெறுமதி 8 ரூபா எனவும் அத்துடன் மேலதிகமாக நான்கு ரூபாய் முத்திரை ஒட்டி அனுப்புமாறு யாழ். பிரதான தபாலகபகுதியினர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளனர். (24)

## குருபூசை

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீமத் யோகர் சுவாமிகள் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை கே. கே எஸ் வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும். [22]

## கும்பாபிஷேகம்

பொலிகண்டி கிழக்கு பதுவளை வீரபத்திரர்ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தெய்வ விக்கிரகங்களுக்கு எதிர்வரும் பங்குனி உத்திரத் தினத்தன்று காலை8.40முதல் 10.40மணிவரையில்உள்ள சுப வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (யோ)

## சிற்றூர்தி சேவை விரிவாக்கம்

(வடமராட்சி)

பருத்தித்துறை மருதடியிலிருந்து தற்போது நடைபெற்றுவரும் சிற்றூர்திச் சேவை இன்று பருத்தித்துறை பழைய பஸ்நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வுள்ளது. (யோ)

---

## 31-ம் நாள் நினைவலைகள்...



| மலர்வு: | உதிர்வு |
|---|---|
| 09 | 02 |
| 08 | 08 |
| 1972 | 1993 |

செல்வி பாலசுந்தரம் வானதி

இனியவளே! உன் நினைவெம்மை வாட்டுதம்மா!

வானத்து நிலவென எழில் படைத்தாய்!
வானதி எனவு நீ பெயரெடுத்தாய்!
தேனொத்த மொழியினை நீ பகர்வாய்!
சிரிப்பெனப் புதுப் புதுப் பூ மலர்வாய்!

கானத்தை இசைத்திடும் புள்ளினமாய்!
காவியச் செலவியே நீ திகழ்ந்தாய்!
ஏனிந்தச் சோகத்தை இன்றளித்தாய்?
இனியவள் நினைவெம்மை வாட்டுதம்மா!

தகவல் : செல்லா மாமா

உன் நினைவால் உருகும்
அப்பா, அம்மா, அண்ணன்,
அக்கா, தங்கை, மற்றும் உற்றார்,
உறவினர்கள்

கடற்கரை வீதி,
பருததிததுறை

(சி-6309)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1 - 11 - 1942

பிரிவு
11 - 4 - 1992

திதி 01-04-1993

## தம்பிப்பிள்ளை சிவராசா

முன்னாள் சாலைப் பரிசோதகர்
இ. போ. ச. கோண்டாவில்

இனிமேலும் வாராயோ! இனிக்கும் நினைவுகளை
தாராயோ!
என்றே சிந்தை ஏங்குகிறதே! எந்தையே!
சிந்தையெல்லாம் உம் நினைவாய் சென்றதையா
இந்த ஒரு வருடம், வையமதில் வாழும் உம் நினைவு

— மனைவி,
பிள்ளைகள்: ஜனனி, ஷாமினி, சகோதரர்கள்

(சி-6310)

தகவல்:- சி. இரத்தினசபாபதி

---

இனத்தில் கலந்தாயடா!
களத்தில் நீநின்ற காட்சி தானோடி
வருடம் ஆறானதே
கண்டும் உனைநாடும் சிந்தை அதுவாகி
கரங்கள் குவித்தோமெடா! மயூரா
உனையும் நினைத்தோமடா! நாங்கள்
கண்ணீர் சொரிந்தோமடா!

என்றும் உமது பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
தங்கைமார், மைத்துனர்மார்,
பெறாமக்கள், மருமக்கள்,
நண்பர்கள்.

[சி-6311]

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-01

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - பொத்துவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ ரமேஷ் [ — இராதாகிருஷ்ணன் - நாவலப்பிட்டி]

1986 ஆம் ஆண்டு யாழ். பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

ஸ்ராலின் [கிருஷ்ணபிள்ளை சிறிஸ்கந்தநாதன் - வடலிவளவு, புலோலி தெற்கு, பருத்தித் துறை - யாழ்.]

1987 ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். மயூரன் [இராசரத்தினம் செல்வக்குமார்(பபி- கலைமணி வீதி, கட்டைப்பிராய் - நீர்வேலி]

1991 ஆம் ஆண்டு மட்டு - இலுப்பையடிச்சேனையில் கரடியனாறு முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

குகநாதன் [இ. ரணசிங்கம் - காரைதீவு - அம்பாறை]

அமலன் [மகாதேவன் சுரேஸ்குமார் - 9-ம் வட்டாரம், மண்டைதீவு - யாழ்.]

மட்டு - வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். அஜித் [இரட்ணசிங்கம் இரகுபரன் - கல்லடி, உப்போடை - மட்டு.]

யாழ். காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். நிதி [விவேகானந்தன் நீதிவண்ணன் - சித்தன் கேணி - யாழ்.]

பொஸ்கோ [கணபதி சிறீரஞ்சன் - பழையவளவு, துன்னாலை கிழக்கு, கரவெட்டி-யாழ்.]

சேது [வீரசிங்கம் கிருபாகரன் - 10-ம் வட்டாரம், சரவணை, வேலணை, ஊர்காவற்றுறை - யாழ்.]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவான் வாசிகளான மூவர் உட்பட 4 தமிழ் விவசாயிகள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6306)

---

# திருமண அழைப்பு

பங்குனி 21ஆம் நாள் 3. 4. 93 சனிக்கிழமை பகல் 12. 10—1. 55 வரை மக நட்ஷத்திரத்தில்,

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **இராமதாஸ்** | **மேனகா** |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

இணுவில் அரசோலை பிள்ளையார் கோவிலில் திருமணம் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அனைவரும் குடும்ப சமேதராக சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

நாதஸ்வர வித்துவான்
K. R. சுந்தரமூர்த்தியும்
பாரியாரும்
இணுவில்

தவில் வித்துவான்
திருமதி இராமநாதன் (ராமு)
தாவடி

இருவீட்டார் அழைப்பு

(4594)

## சிந்தனைக்கு

உடல் சோர்ந்து களையிழந்த நிலையில் உள்ள போது, உள்ளத்தை முனைப்பாகச் செயல்பட அழைப்பது பலன் தராது.

– கேயஸ் கேல்லஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## நட்டாற்றில் தோட்டத் தொழிலாளர்

மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதா என்பது குறித்து அமைச்சர் தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு சாதகமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. கூட்டாகத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒன்பது மாவட்டங்களில் வேட்பாளர் பட்டியலையும் பூர்த்தி செய்துள்ளது.

ஆனால் வழமைபோலவே தனது பாணியில் அமைச்சர் தொண்டமான் ஐ. தே. கட்சியுடன் இ. தொ. கா. கூட்டுச் சேர்வது பற்றி விமர்சனம் செய்கின்றார். தேர்தலில் இ. தொ. காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுமா எனப் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டதற்கு ''நாம் சந்தர்ப்பம், சூழ்நிலையை யோசித்தே முடிவு எடுப்போம். எதிர்க் கட்சி வரிசையில் சுதந்திரக் கட்சியினர் 56 பேர் இருக்கின்றனர். ஆளும் கட்சி வரிசையில் நாம் ஐந்து பேர்தான் இருக்கின்றோம். நாமோ சிறுபான்மை இனம், ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ளோம். இதனை மாற்ற வேண்டும். அதற்கு அரசாங்க பலம் வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் போய் அமர்வதில் என்ன பயன் இருக்கப் போகின்றது'' எனக் கேள்வி எழுப்புகின்றார்.

இதேவேளை ஐ. தே. கவுடனான கடந்த கால உறவு பற்றிக் குறிப்பிடுகையில். ''உறவு என்பது பெயரளவில் இருந்தால் மட்டும் போதாது. அதற்கு நடைமுறையில் உயிரூட்டப்படல் வேண்டும். இந்த விடயங்களில் இ. தொ. கா, கொண்டிருக்கின்ற ஆர்வம், அக்கறை போன்று ஐ. தே. க. வும் கொள்ள வேண்டும். ஆனால் ஐ. தே. க. விற்கு அந்த அக்கறை இல்லை. இ. தொ. கா. ஏதோ கேட்கின்றது. அதைச் சமாளித்து விடுவோம் என்ற நிலையில்தான் ஐ. தே. க. இருக்கின்றது'' எனத் தெரிவிக்கின்றார்.

அமைச்சர் தொண்டமானின் இக்கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சி குறித்துச் சரியானதொரு விளக்கப்பாட்டை அவர் கொண்டிருக்கின்றார் என்பதைபுரிய வைக்கின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி இ. தொ. காவை ஏமாற்ற முற்படுகின்றது. ஆனால் இ. தொ. கா. இதனைத் தெளிவாகப்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# மாணவனின் மரணத்திற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

அரச பணிப்பின் பேரில் 24. 03. 1993 அன்று மாலை 6. 30 மணியளவில் ''மகாபொல'' வைபவத்தில் கலந்து கொள்வதற்காக வவுனியா, கொழும்பு, திருக்கோணமலை மாவட்டங்களுக்குச் செல்வதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 30 மாணவர்கள், அவர்களை வழியனுப்பச் சென்ற ஒரு சிலருடன் கிளாலிக்கடற்கரையில் படகுச் சேவைக்காக காத்து நின்றிருந்தனர்.

அவ்வேளையில் கடலில் ரோந்து சென்ற இலங்கைக் கடற்படைக் கப்பல்களிலிருந்து கரையை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இப் பீரங்கிக்குண்டுகள் கரையிலேநின்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு அருகில் வீழ்ந்து வெடித்தன. இதனால் எமது பல்கலைக்கழக முதலாம் வருட மருத்துவபீட மாணவன் செல்வன் ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் இரு கலைப்பீட மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

அரச கடற்படையினரின் இந்த அநியாயமான செயலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அரசாங்கத்தால் நடாத்தப்படும் அரச வைபவம் ஒன்றிற்கு செல்வதற்காக கரையிலே காத்து நின்ற மாணவர்களுக்கே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளாலிப்பாதை தடை செய்யப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். ஆனால் ''மகாபொல'' வைபவத்தில் கலந்துகொள்ளாமல் விட்டால் அவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்பதனாலேயே ஆபத்தான பயணமொன்றை மேற்கொள்ளுவதற்காக அவர்கள் எத்தனித்தனர்.

சென்றவருடம்மாத்தளையில் நடைபெற்ற மகாபொல வைபவத்திற்கு சமுகம் அளிக்காத மாணவர்களுக்கு இதுவரை மகாபொல கிடைக்கவில்லை. ஆனால் வைபவத்தில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கும் மகாபொல கிடைப்பதற்கு வழி செய்வதாக எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. இது மட்டும் அல்ல எமக்குத் தேவை

களை வவுனியா, மட்டக்களப்பு. திருக்கோணமலை மாவட்டங்களுக்கு அரசாங்கம் அழைத்ததில் என்ன நியாயம் உள்ளது என்பது எமக்குத் தெரியவில்லை. யாழ்குடாவை விட்டு வெளியே வர முடியாத நிலையில் அவர்கள் எப்படி போக்குவரத்து செய்ய முடியும்?

யாழ்ப்பாண மக்களைப் பற்றியோ, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றியோ அரசாங்கம் எவ்வித அக்கறையும் கொண்டுள்ளதாக எமக்குத் தெரியவில்லை. யாழ். பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலேயே புலமைப்பரிசிலை வழங்கியிருந்தால் இன்று நாம்ஒரு மாணவனை இழந்திருக்கமாட்டோம்.

எம் மாணவர்களை வவுனியாவுக்கு அழைத்து வேண்டுமென்றே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட எமது பல்கலைக்கழக மாணவனின் மரணத்திற்கு

> கிளாலி கடற்பரப்பில் அப்பாவிப் பொதுமக்களும், மாணவர்களும் அநியாயமாக படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அலுவலகம் என்பவற்றிற்கு ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரை இங்கு முழுமையாக தருகிறோம்.

அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் இது சம்பந்தமாக எமக்கு சரியான காரணங்கள் தரப்படாவிடில் எமது மாணவ போராட்டத்தை நாம்விரிவுபடுத்தவேண்டி ஏற்படும்.எனவே எமது மாணவனின் மரணத்திற்கு அரசாங்கம் பதில் அளிக்க வேண்டும்.

கிளாலிப் பயணத்தில் மக்கள் கொல்லப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த பல மாதங்களாக நாளாந்தம் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். பயணம் செய்பவர்கள் பொதுமக்களெனத் தெரி

போக்குவரத்தை சீராக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினமும் எம் மக்கள் அழிவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவேதான் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் உங்களிடம் நாம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்:

1. இறந்த எம் மாணவனின் மரணத்துக்கு அரசாங்கம் பதில் தர வேண்டும். யாழ். குடாநாட்டு மக்கள் பயணம் செய்வதற்கு பூநகரிப் பாதையைத் திறந்து விட வேண்டும் அல்லது கிளாலிக் கடற்பரப்பு மீது விதிக்கப்பட்ட தடை வாபஸ் பெறப்பட வேண்டும்.

2. படிப்பதற்கும், ஆய்வுகூட வேலைகட்கும் அத்தியாவசிய தேவைகளான மண்ணெண்ணெய், காகிதாதி ஆகியவற்றுக்கான தடை, போக்குவரத்திற்கு இன்று கைகொடுக்கும் துவிச்சக்கர வண்டிக்கும், அதற்குத் தேவையான உதிரிப் பாகங்களுக்குமான தடை போன்றவற்றால் எமது மாணவ சமுதாயத்தின் கல்விவளத்தை அழிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

3. கண்மூடித்தனமாக கண்டபடி குண்டுவீச்சின் மூலமும் 'ஷெல்' தாக்குதலின் மூலமும் வேண்டுமென்றே குடிமக்களைக் கொல்வதனையும், அங்கவீனப்படுத்துவதனையும் நிறுத்துமாறு கட்டளையிடவும்.

4. பின்வருவனவற்றின் மீதான கட்டுப்பாட்டை அல்லது தடையை நீக்கி எமது கல்வி வளங்களைப் பாழ்படுத்துவதனை நிறுத்துக.
(அ) மண்ணெண்ணெய் இரவில் படிப்பதற்கும், ஆய்வு கூடப் பயன்பாட்டிற்கும் இது அவசியம்.
(ஆ) எழுதுகருவிகள், அச்சிடும் தாள்கள் மற்றும் அதைச் சார்ந்த பொருள்கள்.
(இ) எமக்கு கிடைக்கத்தக்கவாகவுள்ள ஒரேயொரு போக்குவரத்துச் சாதனம் மிதிவண்டி ஆகும். ஆகவே அதற்கும், அதன் உதிரிப்

## சுட்டெரித்த சூரியன்

அன்னை பூபதி . . . .
இருளில் நாம்
இந்தியப் படைகளின்
முகத்திரையை தேடிய வேளை
சுட்டெரித்த சூரியன்
இவள் . . . .

அன்னை பூபதி . . .
திக் கெட்டும் பரவி நின்ற
பாதகரின் பாதங்கள்
தமிழரின் தலைகளில் மிதித்ததை
உலகிற்கு
தட்டிச் சொன்ன அன்னை
இவள் . . .

அன்னை பூபதி . . .
மட்டு நகர் தந்த
மாதரசி
எட்டுத் திசை மிளிர
ஈழத்தில் ஒளியூட்டிய
அக்கினிக் கொழுந்தன்றோ
இவள் . . . .

''செந்தாளன்.''

## பிரதேச செயலக நிதி குறித்து அரச அதிபர் பேசுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தமது கொழும்பு விஜயத்தின்போது அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்ட உ. அ. அ பிரிவுகளுக்கான நிதி ஒதுக்கீடுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். செயலகத்துக்குட்பட்ட உ. அ. அ. பிரிவுகள் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின்படி பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்டு அவர்களுக்கு சிலஅதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே. அதனால் எதிர்வரும் மாதம் தொடக்கம் பிரதேச செயலகங்களுக்கே கொழும்பிலிருந்து நேரடியாக பணம் ஒதுக்கப்பட்டு வழங்கப்படுமென தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க இந் நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் எந்தளவிற்கு வெற்றி அளிக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவ் அதிகாரப் பரவலாக்கல் பற்றி யாழ். செயலக வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில், மற்றைய மாவட்டங்களில் ஒரு சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளே பிரதேச செயலகங்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளன ஆனால் யாழ். மாவட்டத்தில் சகல உ. அ. அ பிரிவுகளும் வடக்கு கிழக்கு மாகாணசபையால் பிரதேச செயலகங்களாக அறிவிக்கப்பட்டு யாழ். செயலக ஊழியர்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் ஒரு சில உ. அ. அ. பிரிவுகளே பிரதேச செயலங்களாக மாற்றப் பட்டுள்ளதுடன் மற்றையவை அவ்வச் செயலகங்களின் கீழேயே இயங்கிவருவதாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## தொண்டர் ஆசிரியர் யாவரையும் நிரந்தரமாக்குக

(கொழும்பு)

இதுவரை நியமனம் வழங்கப்படாத மூன்று வகையான தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நியாயமும் நீதி

பணிப்பாளர்களின் கவனக் குறைவால் ஏற்பட்டதாகும். இவர்களுக்கும், 'சி' 'டி' பட்டியலில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்குமாறு இ. த. ஆ. சங்

சாங்க பலம் வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் போய் அமர்வதில் என்ன பயன் இருக்கப் போகின்றது'' எனக் கேள்வி எழுப்புகின்றார்.

இதேவேளை ஐ. தே. கவுடனான கடந்த கால உறவு பற்றிக் குறிப்பிடுகையில். ''உறவு என்பது பெயரளவில் இருந்தால் மட்டும் போதாது. அதற்கு நடைமுறையில் உயிரூட்டப்படல் வேண்டும். இந்த விடயங்களில் இ. தொ. கா, கொண்டிருக்கின்ற ஆர்வம், அக்கறை போன்று ஐ. தே. க. வும் கொள்ள வேண்டும். ஆனால் ஐ. தே. க. விற்கு அந்த அக்கறை இல்லை. இ. தொ. கா. ஏதோ கேட்கின்றது. அதைச் சமாளித்து விடுவோம் என்ற நிலையில்தான் ஐ. தே. க. இருக்கின்றது'' எனத் தெரிவிக்கின்றார்.

அமைச்சர் தொண்டமானின் இக்கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சி குறித்துச் சரியானதொரு விளக்கப்பாட்டை அவர் கொண்டிருக்கின்றார் என்பதைபுரிய வைக்கின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி இ. தொ. காவை ஏமாற்ற முற்படுகின்றது. ஆனால் இ. தொ. கா. இதனைத் தெளிவாகப் புரிந்துள்ளது என்பதே அதுவாகும்.

அமைச்சர் தொண்டமான் இவ்வாறெல்லாம் ஐ. தே. கட்சியையும், சிங்கள அரசாங்கத்தையும் விளங்கி வைத்திருப்பதெல்லாம் சரி. ஆனால் அவர் கூறுவதுபோன்று அரசாங்கக் கட்சியிலிருந்தால் தான் எதையும் சாதிக்கலாம் என்பதே கேள்விக்குரியதாகும். ஏனெனில், அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து சுமார் 15 வருடங்களாக அமைச்சராக இருந்த தொண்டமானால் மலையக மக்களுக்கென பெரிதாக எதைச் சாதிக்க முடிந்தது? இன்னமும், மலையக மக்கள் தமது 'லய' வாழ்க்கையில் இருந்து விடுபட்டதாக இல்லை, அன்று போலவே இன்று மலையகமக்கள் தமது நெருக்கடி மிக்க வாழ்க்கையில் இருந்து மாறவில்லை. ஆனால் அமைச்சர் தொண்டமானின் அநுசரணையினால், அரசாங்கத்திடம் வேலை செய்த தொழிலாளர்கள் கொம்பனிகளிடம் வேலை புரிய வேண்டிய நிலையே உருவாகியுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துடன் சார்ந்திருப்பதே சிறுபான்மை இனங்களுக்கு ஒரே வழி என்ற ரீதியில் அமைச்சர் தொண்டமான் கூற்று அரசிற்கெதிரான போராட்டங்களுக்கு இ. தொ. கா. முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்பதை வெளிக் காட்டும் ஒன்றாகவேஉள்ளது. ஆனால், அமைச்சர் கூறியிருப்பது போன்று போராட்டங்கள் இன்றி சிங்களப் பேரினவாதத்திடம் இருந்து எதையும் பெற்றுவிடலாம் என எண்ணுவது மடமைத்தனமானதாகும்.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமான் ஐ, தே. க வைப் பற்றித் தெளிவாக உணர்ந்தென்ன, உணரா விட்டால் என்ன? அவர் பௌத்த பேரினவாத சக்திகளிடம் ஒத்துப் போவதால் எதையும் சாதித்து விடப்போவதில்லை. இதனை இன்று தெளிவாக உணர்த்த மலையகத்தில் நடைபெறும் சிங்கள மயமாக்கலும், சிங்களக் குடியேற்றங்களுமே போதுமானதாகும். அத்தோடு திரு. தொண்டமானின் நிலைப்பாடு மலையகத் தோட்டத் தொழிலாளிகளிடம் காணப்படும் போராடும் சக்தியையும் சிதைத்து விடக் கூடியதாகும் இதற்குப் பிரதியீடாக தொண்டமானைப் பொறுத்து அமைச்சர் பதவி நீடிக்கலாம். ஆனால் மலையக மக்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததொன்றாகவே தொடர்ந்தும் இருந்துவரும் என்பதை மறுக்க முடியாது.

---

செய்யப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். ஆனால் ''மகாபொல'' வைபவத்தில் கலந்துகொள்ளாமல் விட்டால் அவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்பதனாலேயே ஆபத்தான பயணமொன்றை மேற்கொள்ளுவதற்காக அவர்கள் எத்தனித்தனர்.

சென்றவருடம்மாத்தளையில் நடைபெற்ற மகாபொல வைபவத்திற்கு சமூகம் அளிக்காத மாணவர்களுக்கு இதுவரை மகாபொல கிடைக்கவில்லை. ஆனால் வைபவத்தில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கும் மகாபொல கிடைப்பதற்கு வழி செய்வதாக எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. இது மட்டும் அல்ல எமக்குத் தேவையான பல விடயங்கள் பற்றி எத்தனையோ தடவைகள் எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டும் எதுவுமே செயற்படுத்தப்படவில்லை. இக்காரணங்களாலேயே இம்முறை வைபவத்தில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் முற்பட்டனர். யாழ் குடாவிற்கான சகல பாதைகளும் மூடப்பட்ட நிலையில் இங்குள்ள மாணவர்

அரசாங்க அதிபர் அலுவலகம் என்பவற்றிற்கு ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரை இங்கு முழுமையாக தருகிறோம்.

அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் இது சம்பந்தமாக எமக்கு சரியான காரணங்கள் தரப்படாவிடில் எமது மாணவ போராட்டத்தை நாம்விரிவுபடுத்தவேண்டி ஏற்படும்.எனவே எமது மாணவனின் மரணத்திற்கு அரசாங்கம் பதில் அளிக்க வேண்டும்.

கிளாலிப் பயணத்தில் மக்கள் கொல்லப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த பல மாதங்களாக நாளாந்தம் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். பயணம் செய்பவர்கள் பொதுமக்களெனத் தெரிந்தும் இராணுவத்தினர் அவர்களை வேண்டுமென்றே கொலை செய்து வருகின்றனர்.

எனவே அரசாங்கம் வாய் மூடி மௌனியாக இருக்காமல் அல்லது படையினரின் பொய்களைப் பிரதிபலிக்காமல் பொருளாதாரத் தடையை நீக்குவதற்கும், முக்கியமாகப்

மக்களைக் கொல்வதனையும், அங்கவீனப்படுத்துவதனையும் நிறுத்துமாறு கட்டளையிடவும்.

4. பின்வருவனவற்றின் மீதான கட்டுப்பாட்டை அல்லது தடையை நீக்கி எமது கல்வி வளங்களைப் பாழ்படுத்துவதனை நிறுத்துக.
(அ) மண்ணெண்ணெய் இரவில் படிப்பதற்கும், ஆய்வு கூடப் பயன்பாட்டிற்கும் இது அவசியம்.
(ஆ) எழுதுகருவிகள், அச்சிடும் தாள்கள் மற்றும் அதைச் சார்ந்த பொருள்கள்.
(இ) எமக்கு கிடைக்கத்தக்கவாகவுள்ள ஓரேயொரு போக்குவரத்துச் சாதனம் மிதிவண்டி ஆகும். ஆகவே அதற்கும், அதன் உதிரிப் பாகங்களுக்கும்.

5. உணவுப் பொருள்கள், மருந்துகள் மீதான பொருளாதாரத் தடை அல்லது கட்டுப்பாட்டால் எம் மக்கள் சிக்குண்டு மெல்ல மெல்லச் செத்து மடிகின்றனர். உண்மையில் இதனால் பலர் இறந்துள்ளனர்.

பிரிவுகள் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின்படி பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்டு அவர்களுக்கு சிலஅதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே. அதனால் எதிர்வரும் மாதம் தொடக்கம் பிரதேச செயலகங்களுக்கே கொழும்பிலிருந்து நேரடியாக பணம் ஒதுக்கப்பட்டு வழங்கப்படுமென தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க இந் நடவடிக்கை யாழ். மாவட்டத்தில் எந்தளவிற்கு வெற்றி அளிக்

லக ஊழியர்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் ஒரு சில உ. அ. அ. பிரிவுகளே பிரதேச செயலங்களாக மாற்றப் பட்டுள்ளதுடன் மற்றையவை அவ்வச் செயலகங்களின் கீழேயே இயங்கிவருவதாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## தொண்டர் ஆசிரியர் யாவரையும் நிரந்தரமாக்குக

(கொழும்பு)

இதுவரை நியமனம் வழங்கப்படாத மூன்று வகையான தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நியாயமும் நீதியும் வழங்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்விச்சேவைச் சபையின் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸைக் கேட்டுள்ளது.

பத்து வருடங்களுக்கு மேல் சேவை செய்யும் தொண்டர் ஆசிரியர்கள் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு நியமனம் மறுக்கப்பட்டுள்ளது. அரசு, தோட்டப்பாடசாலைகளைச் சுவீகரித்த சமயம் செய்தது போல் அவர்களை ஓய்வூதியமற்ற நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கும்படி கோரியிருப்பதுடன்,

01. 01. 1989 இல் இருந்து 31. 12. 1989 வரை சேவையிலிருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இந்நிலை கல்விப் பணிப்பாளர்களின் கவனக் குறைவால் ஏற்பட்டதாகும். இவர்களுக்கும், 'சி' 'டி' பட்டியலில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்குமாறு இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவை சபையின் தலைவரைக் கேட்டுள்ளார்.

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

சென்பற்றிக்ஸ்கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 50ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 2 விக்கெட்டுகளாலும், 10ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. இப் பாட்டி சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் 27ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி 48 ஓவர்களில் 192 ஓட்டங்களை 8விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி 48 ஓவர்களில் 182 ஓட்டங்களைப் பெற்றது. (42)

(தென்மராட்சி)

யா/ கொடிகாமம் மந்துவில் அ. த. க பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி (நாளை) வெள்ளிக்கிழமை பி.ப. 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. வ. த. திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில்நடைபெறும். இதற்கு பிரதமவிருந்தினராக சாவகச்சேரி கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. சின்னத்தம்பி அவர்களும், சிறப்பு விருந்தினராக கொடிகாமக்கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# உலகவங்கி நிதியுதவியை இந்தியா நிராகரிப்பு

(டில்லி)

உலகின் மிகப் பெரும் நீர்த் திட்டமான நர்மதா அணைக் கட்டுத் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவியை இந்தியா நிராகரித்துள்ளது.

சுற்றுப்புறச் சூழல் இயக்கத்தாரும், மனித உரிமை இயக்கங்களும் இந்த அணைக்கட்டுத் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்ததை அடுத்து உலக வங்கி இந்திய அரசிடம் சில விள்க்கங்ளைக் கேட்டுக் காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் மின்சார உற்பத்தி என்பவற்றை உள்ளடக்கியதான இத் திட்டத்திற்காக உலக வங்கியிடம் சுமார் முன்னூறு கோடி ரூபாவை இந்திய அரசு கேட்டிருந்தது. ஆனால் உலக வங்கியின் காலக்கெடு விதிப்பிற்கு பதிலளிக்காமல் மௌனம் சாதித்த இந்திய அரசு இத்திட்டத்திற்கான நிதியுதவியை நிறுத்தும்படி உலக வங்கியிடம் முறைப்படி தெரிவித்துள்ளது.

உலக வங்கியிடமிருந்து மேற்கொண்டும் நிதி வசதிகளை நாடுவதற்கு பதிலாக சொந்த நிதி வசதிகளைக் கொண்டே இந்தியா இத் திட்டத்தை நிறைவேற்றும் என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

## காங்கிரஸ் எம்.பியின் தெரிவு செல்லுபடியற்றது

நீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

1991- ம் ஆண்டில்மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட காங்கிரஸ் கட்சியின் யஷ்வந்தால் காட்லக் அவர்களின் தெரிவு செல்லாது என்று இந்திய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் திரு. காட்லக் அவர்களும், தற்போதைய மகாராஷ்டிர மாநில முதல்வரான சரத்பவாரும், தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியதாகக் கூறியுள்ள அந் நீதிமன்றம் பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

## பொஸ்னியாவில் போர்நிறுத்தம்

(சரயேயோவா)

யூகோஸ்லாவியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரில் கடந்த நான்கு தினங்களாக போர்நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதையடுத்து காயமடைந்த, சுகவீனமுற்ற, போசாக்கின்மையால் வலிமை குன்றிய சுமார் இரண்டாயிரத்து முந்நூறு பொஸ்னிய மக்கள் ஐ. நா. மீட்பு பணிக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் பாடசாலைகளுக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் சிறுவர் பாடசாலைகளுக்கு ஜனசவிய திட்டத்தின் கீழ் இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணத்தைப் பெற சிறுவர் பாடசாலைகளைச் செயற்படுத்திவரும் சனசமூக நிலையங்கள் யாவும் தத்தமது பகுதிப் பிராந்திய சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய பகுதிகளில் கிணறு வெட்டவும், வீதி திருத்தவும் ஜனசவிய நிதியினது பணம் கிடைக்கவுள்ளது என அவர் அறிவித்துள்ளார். (24)

ஈழநாதம்

# ஜெயலலிதா மீதான விசாரணை இடைநிறுத்த உத்தரவு

[சென்னை]

முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவை உறுப்பினர் பதவியில் இருக்க தகுதியற்றவர் என அறிவிக்கக்கோரும் சுப்பிரமணியம் சுவாமியின் மனு தொடர்பாக தேர்தல் கமிஷன் விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துவிட்டது.

இது தொடர்பாக ஜெயலலிதா தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்த நீதிபதி தேர்தல் கமிஷனுக்கு தனது இடைக்கால தீர்ப்புத் தொடர்பான அறிவிப்பை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாக சட்டவிதிகளுக்கு அமைய ஜெயலலிதா சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை இழந்துவிட்டதாக அறிவிக்க வேண்டும் என தமிழக ஆளுநருக்கு சுப்பிரமணியம் சுவாமி மனு ஒன்றை அனுப்பியிருந்ததும் அம்மனுவை அண்மையில் ஆளுநர் விசாரணைக்காக தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைத்ததும் தெரிந்ததே.

## காங்கிரஸ் உறுப்பினர் மீது தாமரைகனி தாக்குதல்

அண்மையில் தமிழக சட்டப் பேரவையில் வைத்து காங்கிரஸ் உறுப்பினரான செல்வகுமாரை தாக்கிய தாமரைகனி நேற்று முன்தினம் இரவு சட்டப் பேரவை உறுப்பினரான ஈஸ்வரனை தாக்கியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அவர் நேற்று காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

தாமரைகனி தற்போதய மீண்டும் ஒரு சம்பவம் கூட்டத்தொடரில் இனி கலந்து கொள்ள தடை விதிப்பது என்றும் அவரை பேரவை உறுப்பினர் விடுதியிலிருந்து வெளியேற்றுவது என்றும் நேற்றும் தமிழக சட்டப்பேரவையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தாமரைகனி தொடர்ந்து உறுப்பினர்களை தாக்கியும் மிரட்டியும் வருவது சகஜமாகிவிட்டதாக நேற்று சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

தமது உறுப்பினர் ஒருவர் மீண்டும் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்றைய கூட்டத்தொடரை காங்கிரஸ் உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

## உதைப்பந்தாட்டம்

உரும்பராய் - ஊரெழு விளையாட்டு கழகங்களின் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் நாளை வெள்ளி ஊரெழு ரோயல் விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென்மேரிஸ் எதிர் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே போட்டி இடம் பெறும்.

## விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பாடத்திட்ட கருத்தரங்கு

க. பொ. த உயர்தர பௌதிகம், விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுக்கானபாடத்திட்ட கருத்தரங்குகளை தேசிய கல்வி நிறுவனமும், கல்வித் திணைக்களமும் இணைந்து யாழ். பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் நடாத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளன.

இக் கருத்தரங்கில் உயர்தர வகுப்பில் மேற்படி பாடங்களை கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் பங்குபற்றஉள்ளனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விலங்கியல் பாட கருத்தரங்கும், 8ஆம் திகதி பல்கலைக்கழக பௌதிக துறையில் பௌதிகமும், 28ஆம் திகதி முதல் மே மாதம் 1ஆம திகதிவரை கணித புள்ளிவிபர துறையில் கணித பாட கருத்தரங்கும்நடைபெறவுள்ளன.

இக் கருத்தரங்குகள் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரைஇடம்பெறவுள்ளன.

## கலந்துரையாடல்

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## கண்டெடுப்பு

ஆறு அடையாளஅட்டைகள், பெண்கள் அணியும் ஒரு கைக்கடிகாரம், படச்சுருள் ஆகியவற்றுடன் பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி ஈழநாதம் பணிமனையில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## உத்தரப் பிரதேசத்தில் குண்டுவெடிப்பில் 4 பேர் பலி

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் திரையரங்கு ஒன்றில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர், 40 பேர் காயமடைந்தனர். இதே சமயம் புதுடில்லியில் உள்ள பங்கு சந்தை கட்டடத்தில் குண்டு இருப்பதாக இனந்தெரியாத ஒருவர் தொலைபேசியில் கூறியதையடுத்து நேற்று அப்பகுதியில் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்படுகின்றது.

## காங்கிரஸ் உறுப்பினருக்கு பாதுகாப்பில்லாத நிலை

-எதிர்க்கட்சித் தலைவர்

[சென்னை]

காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுவருகின்றனர் இதுவரை நான்கு உறுப்பினர்கள் இவ்வாறு தாக்கப்பட்டுவிட்டனர் என தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை தோன்றிவிட்டதாக அவர் அந்த அறிக்கையில் மேலும்குறிப்பிட்டுள்ளார்

## வடமராட்சி

மாறி மேற்கொண்டது.

இதேவேளை நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வல்வெட்டித்துறைக்கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் கரையோரக் குடியிருப்புக்கள் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல் அநேகமாகக் கடலிலேயே நடந்ததாகவும், பீரங்கிக்குண்டுகள் கடலில் விழுந்துவெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலின்போது மீனவர்களின் மீன்பிடிப்பொருள்கள் சில சேதமடைந்ததாகவும் அறிய முடிகிறது.

இத்தாக்குதல் சம்பவங்களினால் அவ்வப்பகுதி பாடசாலைகள், அலுவலகங்கள் பலவும் கலைந்தன. பாடசாலைகளில் இருந்த மாணவர்கள் ஏற்பட்ட பதற்றநிலையினால் தவணைப்பரீட்சைகளைஎழுத முடியாத நிலை ஏற்பட்டது.

உடுப்பிட்டி, தொண்டமனாறு வல்வெட்டித்துறைப்

## வெளிவாரி மாணவருக்கான கல்விக் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குத் தொடர் இம்மாதம் 19 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது. கலை மற்றும் வர்த்தகத் துறைகளின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் அனைவருக்கும் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஆயத்த நடவடிக்கைகளை யாழ். பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இக் கருத்தரங்குகளுக்கான நேர அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (க)

## காங்கேசன்

சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வதிவிடப் பிரதிநிதி கலந்து கொள்கின்ற இச்சந்திப்பில் மேற்படி விடயம் சம்பந்தமாக சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என தெரியவருகின்றது. மேலும் இச்சந்திப்பு ஓரிரு தினங்கள் நீடிக்கப்படலாமெனத் தெரியவருகின்றது. [பா][நி]

## தனிச்

பட்டிருப்பதை அலட்சியம் செய்துவிட்டுதமிழ்மொழியோ ஆங்கில மொழியோ இன்றித் தனித்துச் சிங்களத்தில்மட்டும காரியங்களை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.


## மகாபொல கொடுப்பனவு 3-ம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் கலைப்பிரிவு | 01-04-93 | 9.00-12.00 மு.ப |
| வர்த்தகப்பிரிவு வியாபார நிர்வாகப்பிரிவு | 07-04-93 | 9.00-12.00 மு.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 19-04-93 | 9.00-12.00 மு.ப |



உ

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி

ஸ்ரீ வீரசக்தி வினாயகர் தேவஸ்தானம்

## அறிவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தின் பெயரால் சிலர் பணம் சேகரிப்பதாக அறிந்தோம். ஆனால் பெறுநர் சபை



## மரண அறிவித்தல்

திருமதி

## கந்தையா தங்கரெத்தினம்

14, கச்சேரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி கந்தையா தங்கரெத்தினம் 31-03-93 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தொண்டர் கந்தையாவின் அன்பு மனைவியும், தனலட்சுமி (கொழும்பு), காலஞ்சென்ற தனபாலசிங்கம், சரஸ்வதி, தயாநிதி, லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசிங்கம் (கொழும்பு), கோமளேஸ்வரி, காலஞ்சென்ற விக்கிரமாராய்ச்சி, குணபாலசிங்கம், சுசீலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும். பொன்னுத்துரை (இயக்கச்சி), காலஞ்சென்ற பூபாலசிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை), விஜயரெத்தினம் (நயினாதீவு). அப்பாத்

## 3-ம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 01-04-93 | 9.00-12.00 மு.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 07-04-93 | 9.00-12.00 மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | 19-04-93 | 9.00-12.00 மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |

### நான்காம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 01-04-93 | 1.30-3.00 பி.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 07-04-93 | 1.30-3.00 பி.ப |
| வியாபாரநிர்வாகப்பிரிவு | | |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | 19-04-93 | 1.30-3.00 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |

### மூன்றாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 02-04-93 | 9.00-12.00 மு.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 15-04-93 | 9.00-12.00 மு.ப |
| வியாபாரநிர்வாகப்பிரிவு | | |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | 20-04-93 | 9.00-12.00 மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |

### இறுதி வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 02 04-93 | 1.30-3.00 பி.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 15-04-93 | 1.30-3 00 பி.ப |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | 20-04-93 | 1,30-3.00 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை.

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

[சி/6308]

---

உ

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி
ஸ்ரீ வீரசக்தி வினாயகர் தேவஸ்தானம்

## அறிவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தின் பெயரால் சிலர் பணம் சேகரிப்பதாக அறிந்தோம். ஆனால் பெறுநர் சபை பணமோ, பொருளோ சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி அளிக்கவில்லை எனவே தேவஸ்தானத்தின் பெயரால் எவருக்கும் பணமோ பொருளோ வழங்கவேண்டாம் என வினாயகர் அடியார்களை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

–பெறுநர் சபை

(4607)

---

## அறிவித்தல்

வட மாகாண கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பொதுக் கூட்டம்

காலம்: 4-4-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி

இடம்: சமாச காரியாலயம், 201, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்: இறைவணக்கம், தலைவர் உரை, பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், புதிய இயக்குனர்களைத் தெரிவுசெய்தல்

குறிப்பு: 19.03.93-ல் சகல அங்கத்துவர்களுக்கும் இக் கூட்ட அறிவித்தல் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டது, தபால்கள் கிடைக்கத் தாமதம் ஏற்பட்டால் இவ்வறிவித்தலைப் பொதுக்கூட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு தங்கள் பிரதிநிதிகளைப் பொதுக் கூட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றும்படி வேண்டுகின்றோம்.

(4604) -தலைவர்

---

கள் 8:ல் சேதமடைந்ததாகவும் அறிய முடிகிறது.

இத்தாக்குதல் சம்பவங்களினால் அவ்வப்பகுதி பாடசாலைகள், அலுவலகங்கள் பலவும் கலைந்தன. பாடசாலைகளில் இருந்த மாணவர்கள் ஏற்பட்ட பதற்றநிலையினால் தவணைப்பரீட்சைகளைஎழுத முடியாத நிலை ஏற்பட்டது.

உடுப்பிட்டி, தொண்டமனாறு வல்வெட்டித்துறைப் பகுதிகள் எங்கும் அமைதி ஏற்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டதாக எமது செய்தியாளர் அங்கிருந்து அறிவிக்கிறார். (யோ)

---

### க. பொ. த

கொக்குவில் இந்துக்கல்லூரிகளில் தலா இருவரும் ஹாட்லிக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளில் தலா ஒவ்வொருவரும் எட்டுப் பாடங்களிலும் திறமைச் சித்திபெற்றுள்ளனர்.

இதேவேளை நாடுமுழுவதும் 690 மாணவர்கள் எட்டுப்பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

---

### தெற்கில்

இன்றுமுதல் ஒருவாரத்திற்கு தெற்கில் ஊர்வலங்கள் நடாத்தவும் ஆட்கள் கூடுவதையும் தடை செய்யப்போவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த ஒருவார காலப்பகுதியும் கடந்த தேர்தல் காலங்களைவிட கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

... சேர்ந்த திருமதி கந்தையா தங்கரெத்தினம் 31-03-93 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தொண்டர் கந்தையாவின் அன்பு மனைவியும், தனலட்சுமி (கொழும்பு), காலஞ்சென்ற தனபாலசிங்கம், சரஸ்வதி, தயாநிதி, லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசிங்கம் (கொழும்பு), கோமளேஸ்வரி, காலஞ்சென்ற விக்கிரமாராய்ச்சி, குணபாலசிங்கம், சுசீலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும். பொன்னுத்துரை (இயக்கச்சி), காலஞ்சென்ற பூபாலசிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை), விஜயரெத்தினம் (நயினாதீவு), அப்பாத்துரை, கணேஷ் பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இன்று பி. ப. 4 00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்
குணபாலசிங்கம்
(மருமகன்)

(சி/6314)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 31-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8827

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-6063, 27-8877, 26-6026, 26-9283, 41-9759, 24-8484, 24-6065, 24-6439, 28-4183, 26-2135, 26-7068, 42 0704, 27-9489, 22-3932, 41-9652, 27-7717, 26-7286, 24-0416, 26-6983, 27-6887, 28-5862, 26-3530, 27-9030, 28-3528, 26-7272.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5529, 40-7583, 26-3130, 24-7087 24-1685, 26-4429, 42-2157, 42-6157, 24-8429, 24-5416, 27-9033, 26-0767, 24-7628.

---

**கண்ணீர்க் காவியம்!** **கல்வாரியின்சரித்திரம்!**

### இன்று தொடக்கம் நான்கு நாட்கள் மேடையேறுகிறது!

## யாழ். திருமறைக் கலாமன்றத்தின்

# பலிக்களம்

காலம்: ஏப்ரல் 1, 2, 3, 4 1993

நேரம்: தினமும் மாலை 6.45 மணி

[ பக்தி - இசை - உரை - நாடகம் ]

இடம்: யாழ். பிரதானவீதி, மன்றக் கலையரங்கம்

★ சிலுவையோடு உலாவந்து ★ கல்வாரியில் பரணிகண்ட ★ இறைமகனின் இறுதியாத்திரை

(சி-6296)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது